**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No. 56/2023**

Date: 23.07.2025.

வா.சா.1 - திருமதி. ஹீமா ரோஸ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது கணவர் பெயர் அருள் செல்வன். தற்போது என் உடன் தான் இருக்கிறார். எனக்கு இரண்டு குழந்தைகள் வழுதனம்பள்ளம் பள்ளியில் படித்து வருகிறார்கள். எனது தாயார் பெயரில் அவரின் தாயர் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ–1 போலியானது என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்ற விபரத்தை நான் வழக்குரையில் கூறவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ–1ன் எனது பாட்டி எனது தாயாருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம், அதன் இரண்டாம் பக்கத்தில் கிரைய தொகை எதற்காக வழங்கப்பட்டது என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த விபரம் தவறு என்று நான் எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். எனது தாயார், 1ம் பிரதிக்கு கிரைய ஆவணம் ஏழுதிக்கொடுத்தார் என்றால் , அதுவிபரம் எனக்கு தெரியாது. அந்த கிரைய ஆவணம் செல்லாது என்பதற்கு அடிப்படை ஆதாரம் என்ன என்ற விபரங்கள் பற்றி நான் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். இந்த 2 ஆவணங்களும் பதிவு செய்யப்பட்டு, வருவாய் துறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு பட்டா போக்குவரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால், சரிதான். நான் எம்.எ. பிஎட் படித்துள்ளேன். நான் வெளியூரில் ஹாஸ்டலி ல் தங்கி எம்.ஏ., பி.எட் படித்தேன் என்றால், சரிதான். அதற்கான செலவுகள் அனைத்தையும் எனது தாயார் தான் செய்தார் என்றால், சரிதான். நான் வீட்டில்

பெற்றோருக்கு தெரியாமல் தான் திருமணம் செய்துகொண்டேன் என்றால், சரிதான். இருந்தும் எனது தாயார் எனது கணவரின் கடன்களை அடைத்து, அவருக்கு டிம்போ வாங்கி கொடுத்தார் என்றால், சரியல்ல. டிம்போ வாங்கிய கடனையும் எனது தாயார் தான் திருப்பி செலுத்தினார் என்றால், சரியல்ல. திருமணத்திற்கு பிறகு நான் எனது கணவருடன் ஈத்தாமொழி, பருத்திவிளை, ஆகிய பல இடங்களில் குடியிருந்தேன் என்றால், சரிதான். வாடகை வீடுகளில் குடியிருந்தேன். அந்த சமயத்தில் எனது தாயார் தான் எனது கணவரின் கடன்களை திருப்பி செலுத்தினார் என்றால், சரியல்ல. எனது கணவருக்கு வேலை இல்லை என்றால், சரியல்ல, சிறிது காலம் வெளிநாட்டில் இருந்தார். அவர் வெளிநாடு செல்வதற்கும் எனது தாயார் தான் வெளியில் கடன் கொடுத்தார் என்றாலும், அதனையும் என் கணவர் திருப்பி செலுத்தவில்லை என்றாலும், சரியல்ல. எனக்கும் , எனது கணவருக்கும் தகறாறு ஏற்பட்டு ராஜாக்கமங்கலம் காவல் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்றால், சரிதான். குளச்சல் காவல் நிலையத்தில் எனது தாயார் மீது நான் புகார் கொடுத்தேன் என்றால், சரிதான். விலைக்கு கொடுத்த வழக்கு சொத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு சில நாட்களுக்கு முன்பாக அத்துமீறி நுழைந்து , சொத்து என் கைவசம் இருப்பதாக உண்மைக்கு புறம்பாக விபரங்களை கூறி இந்த வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. நான் அந்த வீட்டில் அத்துமீறி நுழைந்ததாக எனது தாயார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால், சரிதான். மேற்படி வழக்கில் நான் குறிப்பிடும் இரண்டு விலை ஆதார ஆவணங்களையும் குறித்து நான் வழக்கு செய்ய எனக்கு தகுதியில்லை என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதியாகிய எனது தாயாரின் ஒப்புதலின் அடிப்படையில் தான் தாவாசொத்தில் குடியிருப்பதாக

வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால், சரியல்ல. நான் தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக அதில் குடிவசித்து வருகிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.